**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.

**சங்கரன்கோவில் SDAT ஸ்டேடியத்தில் கோடை கால பயிற்சி முகாம் துவங்கியது**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி பிரிவின் சார்பாக செயல்பட்டு வரும் சங்கரன்கோவில் SDAT விளையாட்டரங்கத்தில் கோடை கால பயிற்சி முகாமை 24.04.2017 அன்று காலை 6.30 மணிக்கு **மண்டல முதுநிலை மேலாளர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திருநெல்வேலி மண்டலம் திரு.பா.சிவகுமார் அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்கள்.** இப்பயிற்சி முகாம் 24.04.2017 முதல் 08.05.2017 வரை நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி முகாமானது அனைத்து வயதினருக்கும் **1.**தடகளம், **2.** இறகுப்பந்து, **3.** கூடைப்பந்து, **4.** குத்துச்சண்டை, **5.** கிரிக்கெட், **6.** கால்பந்து, **7.** வாள்சண்டை, **8.** ஜிம்னாஸ்டிக்ஸ், **9.**கைப்பந்து, **10.** ஹாக்கி, **11.** டேக்வாண்டோ, **12.** வாலிபால், **13.** பளுதூக்குதல், **14.**கபாடி, **15.** மேசைப்பந்து, **16.** டென்னிஸ், **17.** ஜீடோ, **18.** ஸ்குவாஷ் மற்றும் **19.** வில்வித்தை ஆகிய விளையாட்டுக்களுக்கு பிரத்யேகமாக பயிற்சி முகாம் 24.04.2017 முதல் 08.05.2017 வரை நடைபெற்று வருகிறது. நுழைவு கட்டணம் இல்லை. அனைவரும் இலவசமாக இப்பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம்.

மேற்படி பயிற்சி முகாமின் நிறைவு நாள் அன்று அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்வில், திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். இதில் உடற்கல்வி ஆசிரியர்கள் திரு. முருகேசன் அரசு மேல்நிலைப்பள்ளி செவல்குளம், திரு.விஜயகுமார் அரசு மேல்நிலைப்பள்ளி காசிதர்மம், திரு. நாராயணன் கோமதி அம்மாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சங்கரன்கோவில், திரு. பாலமுருகன் கோமதி அம்மாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சங்கரன்கோவில், திரு. ரமேஷ் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி சங்கரன்கோவில், திரு. கார்த்தி முதன்மை விளையாட்டு வீரர், திரு. குமார் அரசு உயர்நிலைப்பள்ளி கீழப்பாவூர் மற்றும் திரு. ராமசாமி கலைவாணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி திருவேங்கடம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தெரிவித்தார்கள்.

ஒம்/–

மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி